பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D M K

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 15] சென்னை: ஆடி 24உ (9—8—67) புதன் ★ வெளியூர்: ஆடி 25உ (10—8—67) வியாழன் [இதழ்: 48

ரேஷன் கடைகளில் கோதுமை

ஆக. 15-முதல் கிடைக்கும்

சென்னை, ஆக. 8—

ஆகஸ்டு 15-ஆம் நாள் முதல் சென்னை நகரில் உள்ள எல்லாப் பங்கீட்டுக் கடைகளிலும் கோதுமை கிடைக்கும்.

ஒவ்வொரு பங்கீட்டுக் கார்டுக்கும் மாதம் 2 கிலோ கிராம் கோதுமை கொடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியா, இந்தியாவா-எது தேவை?

இந்தியைத் திணித்தால் இந்தியா சிதறிவிடும்

நாடாளுமன்ற மேலவையில் உறுப்பினர்கள் எச்சரிக்கை

புதுடில்லி, ஆக. 8—

இந்தியை இந்தியாவின் இணைப்பு மொழியாக ஆக்குவதற்கு நாடாளுமன்ற மேலவையில் கடுமையான எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது.

எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்கள் மட்டுமன்றி, இந்தி பேசாத பகுதிகளைச் சேர்ந்த காங்கிரசுக் கட்சி உறுப்பினர்களும் கடும் எதிர்ப்புக் குரலை எழுப்பினர்.

'இந்தி பேசாத மக்கள்மீது இந்தியைத் திணித்தால் இந்தியா சிதறுண்டுவிடும்' என்றும் எச்சரிக்கப்பட்டது.

கல்விக் கமிஷனின் அறிக்கை—நாடாளுமன்றக்குழுவின் அறிக்கை ஆகியவற்றின்மீதான விவாதம் இன்று இரண்டாவது நாளாக மேலவையில் நடைபெற்றது.

ஜனசங்க உறுப்பினரான வி. எம். கார்டியா என்பவர், 'இந்தியை இணைப்பு மொழியாக்குவதற்குக் காலவரையறை ஏற்படுத்த வேண்டும்' என்று வற்புறுத்தினர்.

சம்யுக்த சோஷலிஸ்டுக் கட்சி உறுப்பினர் இராஜ் நாராயணன், 'ஆங்கிலத்தை உடனடியாகத் தடைசெய்ய வேண்டும்' என்றும், காங்கிரசு உறுப்பினர் அக்பர் அலிகான், 'இந்தி போதிய வளர்ச்சி பெறும்வரை விஞ்ஞான—தொழில்நுட்பத் துறைகளுக்கு ஆங்கிலம் நீடிக்க வேண்டும்' என்றும் கூறியபோது, இந்தி—ஆங்கில சர்ச்சை, உச்சநிலையடைந்தது!

தென்னகத்தைச் சேர்ந்த பல உறுப்பினர்கள், 'ஆங்கிலம் நீடிக்க வேண்டும்' என்றனர்.

'வட்டார மொழிகளைப் பயிற்றுமொழிகளாக்க வேண்டும்' என்றும், 'வட்டாரப் பள்ளிகள் ஏற்படுத்த வேண்டுப்' என்றும் கூறப்பட்ட யோசனைகளுக்கு ஒருமுகமாக ஆதரவு கிட்டவில்லை.

காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த திருமதி யசோதா ரெட்டி (ஆந்திரம்) பேசுகையில், 'கல்வித் துறையில் ஆங்கிலமே நீடிக்க வேண்டும்' என்றும், 'உயர்தரக் கல்விக்கும், தொழில் நுணுக்கக் கல்விக்கும் தகுதி வாய்ந்ததாக வளர்ச்சி பெற்றிருக்கும் மொழி ஆங்கிலம் ஒன்றுதான்' என்றும் கூறி வாதாடினர்.

'ஆங்கிலமொழியே இந்த நாட்டு மக்களை ஒன்றுபடுத்தியது' என்று எடுத்துக்காட்டி, 'ஏற்கனவே வழக்கில் இருந்து வரும் அந்த மொழியை ஏன் பயன்படுத்திக் கொள்ளக் கூடாது?' என்று வினவினர். அவர் மேலும் கூறியதாவது:—

"கடைபிடிக்கும் கொள்கையின் காரணமாக இந்த நாட்டு மாணவர்கள் அதிகப்படியான சோதனைகட்கு ஆளாகின்றனர்.

"மும்மொழிக் கொள்கை மூலம் தேசிய ஒருமைப்பாட்டை ஏற்படுத்த முடியாது.

"தென்னாட்டில் உள்ள ஒரு மாணவன் வட்டார மொழியையும் ஆங்கிலத்தையும் கற்கிற நேரத்தில், நாட்டின் மற்றொரு பகுதியான இந்தி பேசும் மாநிலங்களில் உள்ள மாணவர்கள், இந்தியை மட்டுமே கற்றுக்கொண்டிருப்பார்கள்."

பி. சோ. கட்சியைச் சேர்ந்த பங்கா பிகாரிதாஸ் பேசுகையில் 'இந்திய அடிப்படையில்லாத மொழியான ஆங்கிலம் நமது கருத்தை வெளியிடுவதற்கான சாதனமாக இருக்க முடியாது' என்றுர்.

இந்தியை ஆதரித்த அவர், இந்தி வெறியர்களையும் குற்றஞ் சாட்டினர்; 'இந்தியைமற்றவர்கள் மீது திணிக்க முயலுவதன் மூலம், இந்தி வெறியர்கள் இந்திக்குப் பகையைத் தேடிக்கொள்வதாக அவர் கூறினர்.

இராம் நிவாஸ் மிரா (காங்) பேசுகையில், 'இந்தி பயிற்று மொழியாக வளரும் வரை ஆங்கிலம் நீடிக்கவேண்டும்' என்றுர்.

பாலசந்திர மேனன் பேசுகையில், 'இந்தியை இந்தி பேசாத மக்கள் ஏற்றுக் கொள்வதற்கு அதிகக் காலம் பிடிக்கும்' என்றுர்.

தமிழ்நாட்டைச் சேர்ந்த காங்கிரசு உறுப்பினர் டி. செங்கல்வராயன் பேசுகையில்,

"இந்தி பேசாத பகுதி மக்கள்மீது இந்தி திணிக்கப்படுமானல் நாட்டின் ஒற்றுமைக்கே அபாயம் ஏற்படும்" என்று எச்சரித்தார்.

திரு. வி. எம். கார்டியா பேசுகையில், 'இந்தியே இணைப்பு மொழியாக வேண்டும்' என்றுர்; 'தேவ நாகரி எழுத்துக்களை இந்தியாவின் பொது வரிவடிவமாக்க வேண்டும்' என்றுர்; 'சமஸ்கிருத வளர்ச்சிக்கும் ஊக்கமளிக்க வேண்டும்' என்றுர்.

இராஜ் நாராயணன் பேசுகையில், 'இந்தியைத் தென்னக மக்கள்மீது திணிக்க விரும்பவில்லை என்றுலும் ஆங்கிலத்தை உடனடியாக நாட்டைவிட்டே விரட்டிவிட வேண்டும்' என்றுர்.

அக்பர் அலிகான் (காங்) கூறியதாவது:—

"நாடு முக்கியமா—மொழி முக்கியமா என்ற கேள்வி ஒவ்வொருவர் முன்பும் எழுந்துள்ளது. இந்திக்கு நான் எதிரியல்ல; இந்திதான் இணைப்பு மொழியாக முடியும்; ஆனல், உயர்தரக் கல்விக்கு ஆங்கிலமே நீடிக்கவேண்டும். ஆங்கிலத்தை அகற்றக் கூடிய அளவுக்கு இந்தி இப்போது இல்லை; அதற்கு இன்னும் ஒரு 25 ஆண்டுகளாவது ஆகும்."

டில்லியிலும் காங்கிரசு ஆட்சிக்கு அபாய நிலை

அதிர்ச்சியுடன் ஆராய்கிறது மேலிடம்

புதுடில்லி, ஆக. 8—

இந்திய நாடாளுமன்ற வரலாற்றிலேயே இன்று முதன்முறையாக ஆளுங்கட்சிக்குத் தோல்வி ஏற்பட்டது.

தாழ்த்தப்பட்டோர் நலத்துறை கமிஷனரின் பரிந்துரைகளைச் செயல்படுத்தத் தவறியது குறித்து எதிர்க் கட்சியினர் கொண்டுவந்த திருத்தத் தீர்மானம் 2 வாக்குகள் அதிகம் பெற்றுவிட்டது.

தோற்கடிக்கப்பட்ட அரசுத் தீர்மானம் மறு வாக்கெடுப்பின் மூலம் தப்பிப் பிழைத்தது.

அரசாங்கத் தீர்மானத்துக்கு ஆதரவாக 89 வாக்குகளும் எதிர்க் கட்சித் தீர்மானத்துக்கு ஆதரவாக 91 வாக்குகளும் கிடைத்தன.

'உடன், அமைச்சரவை பதவி விலகவேண்டும்' என்ற குரல்கள் அவையில் எழுந்தன.

இந்த நிலையில் அவைத் தலைமை பூண்டிருந்த துணை அவைத் தலைவர் திரு. கடில்கர், அதே தீர்மானத்தை மீண்டும் வாக்கெடுப்புக்கு விட்டார்; இதனைத் தொடர்ந்து அவையில் கூச்சலும் குழப்பமும் ஏற்பட்டன.

மறு வாக்கெடுப்பில் அரசுக்கு ஆதரவாக 115 வாக்குகளும், எதிர்க் கட்சிக்கு ஆதரவாக 107 வாக்குகளும் கிடைத்தன.

இந்த அளவுக்குக் குறுகிய வேறுபாட்டில் அரசுத் தீர்மானம் நிறைவேறியதும் இதுவே முதல் தடவையாகும்.

தோற்றுவிட்ட அதே தீர்மானத்தை மீண்டும் வாக்கெடுப்புக்கு விட்டு, முதலில் அவையில் இல்லாது வெளியே சென்றிருந்த உறுப்பினர்களையும் வாக்களிக்க அனுமதித்த செயலை, எதிர்க் கட்சி உறுப்பினர்கள் பலர் கடுமையாகக் கண்டித்தனர்.

மேலிடத்தின் அதிர்ச்சி

ஆளுங் கட்சிககு அதிர்ச்சி தரக் கூடிய இந்த நிகழ்ச்சி குறித்துக் காங்கிரசு மேலிடம் அவசர அவசரமாக இன்று கூடி ஆலோசனை நடத்தியது.

இதற்கிடையில் நாடாளுமன்ற விவகார அமைச்சர் டாக்டர் ராம் சுபாக் சிங், எல்லாக் காங்கிரசு உறுப்பினர்களுக்கும் வெளியூர்களில் உள்ள அமைச்சர்களுக்கும் அவசர அழைப்பு விடுத்திருக்கிருர்; 'மக்களவைக் கூட்டத்தொடர் முடியும் ஆக. 12-ம் நாள் வரை அனைவரும் டில்லியில் இருக்க வேண்டும்' என்று அவர் வற்புறுத்தியிருக்கிருர்.

வார்னிஷ் குடித்துப் பலியானேர் எண்ணிக்கை அதிகரிப்பு

மருத்துவமனைகளில் மேலும் பலர் கவலைக்கிடமான நிலையில் அனுமதி

உயிரைக் காக்க இரவு பகலாக டாக்டர்கள் முயற்சி

சென்னை, ஆக. 9—

சென்னை கிருஷ்ணம்பேட்டையிலுள்ள ரோட்டரி நகர் என்னும் பகுதியில் கடந்த ஞாயிறன்று வார்னிஷ் குடித்ததால், இன்று காலை 2-மணிவரையில் 49 பேர் இறந்தனர். இவர்களில் 39 பேர் இராயப்பேட்டை மருத்துவமனையிலும், ஒருவர் ஸ்டான்லி மருத்துவமனையிலும், ஒருவர் தலைமை மருத்துவமனையிலும், மற்றும் எண்மர் அவர்கள் வாழ்ந்த ரோட்டரி நகர் பகுதியிலும் இறந்தனர். இவர்களில் நான்குபேர் பெண்கள்.

மேலும் 35 பேர்கள் கவலைக்கிடமான நிலையில் உள்ளனர். இன்னும் பலர் மருத்துவமனைக்கு வந்தவண்ணமுள்ளன.

இவர்களுக்கு வார்னிஷ் விற்றதாகக் கூறப்படும், அந்தப் பகுதியிலேயே கடை வைத்திருக்கும் பரமானந்தம் என்பவரும், மற்றும் இருவரும் கைது செய்யப்பட்டிருப்பதாகக். காவல் துறையினர் கூறினர்.

வார்னிஷ் விற்கப்பட்ட கடையிலிருந்து கைப்பற்றப்பட்ட வார்னிஷ்—ஏதேனும் கெடுதல் தரும் பொருள் கலந்திருக்கிறதா எனக் கண்டுபிடிக்க இரசாயனப் பரிசோதனைக்காக அனுப்பப்பட்டிருக்கிறது.

இராயப்பேட்டை மருத்துவமனையில் 85 பேர்களும், தலைமை மருத்துவமனையில் 9 பேர்களும் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்; இவர்களில் ஒரு பெண் உட்பட 5 பேர் இறந்துவிட்டனர்.

இராயப்பேட்டை மருத்துவமனையில் 30 படுக்கைகள் கொண்ட ஒரு பகுதியையே இவர்களுக்கென ஒதுக்கி, சுமார் 40 மருத்துவர்கள் அவசரமாக அழைக்கப்பட்டுக் கவனித்துவருகின்றனர்.

அவசர நிலைககுத் தேவையான பொருள்கள் அனைத்தும் கிடைப்பதற்கென, மருத்துவமனையின் பல்வேறு பகுதிகளும், மருந்து அறையும் இரவு முழுதும் திறந்திருந்தன.

மருத்துவர்கள், இருவர்—மூவர் கொண்ட குழுக்களாகப் பிரிந்து சென்று, மோசமான நிலையிலுள்ள நோயாளிகளுக்கு சலைன், மற்றும் பிராணவாயுவும் அளித்து சிகிச்சையளிக்கின்றனர்.

காரணம் கண்டுபிடிப்பு

வார்னிஷ் அருந்தியதால் ஏற்பட்ட சாவுகளுக்கான காரணத்தைக் சண்டுபிடித்துள்ளதாகவும், எவ்வாறு சிகிச்சை செய்யவேண்டும் என்பதைப்பற்றி யோசனை கூறியிருப்பதாகவும் அரசு இரசாயன ஆய்வுககூடத்தின் இயக்குனரான டாக்டர் ஏ. ஆர். நடராசன் கூறினர்.

அண்ணு அதிர்ச்சி

திருச்சி, ஆக. 9—

சென்னை நகரில் வார்னிஷ் குடித்ததால் பலர் இறந்த செய்தியை அறிந்து, அண்ணு அவர்கள் அதிர்ச்சியடைந்தார்.

இச்சோகச் செய்தியை அண்ணு அவர்களிடம் அறிவித்தபோது, 'இது பரிதாபமான—கொடுமையான நிகழ்ச்சி' என்று கூறினர்.

கூட்டுறவுச் சட்டத் திருத்தம்

அண்ணு அறிவிப்பு

திருச்சி, ஆக. 8—

"கூட்டுறவுச் சங்கங்களில் காணப்படும் குறைபாடுகளைப் போக்குவதற்காகத் தமிழக அரசு கூட்டுறவுச் சட்டத்தைத் திருத்த எண்ணியுள்ளது"

என்று முதலமைச்சர் அண்ணு அவர்கள் கூறினர்.

"பழைய காங்கிரசு அரசு இதற்காக ஒரு குழுவை நியமித்தது; ஆனல், இத்துறையில் எதுவும் செய்யப்படவில்லை"

என்பதையும் அண்ணு அவர்கள் சுட்டிக்காட்டினர்.

வார்னிஷ் விற்கக் கட்டுப்பாடு

சென்னை, ஆக. 9—

வார்னிஷ் குடித்துப் பலர் மரணமடைய நேர்ந்திருப்பதால், வார்னிஷ் தயாரிப்பு விற்பனையைக் கட்டுப்படுத்துவதற்குக் கடுமையான நடவடிக்கைகள் விரைவிலேயே மேற்கொள்ளப்படலாம் என்று தெரிகிறது.

நம் நாடு

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

திருவள்ளுவராண்டு 1998 ஆடி 24 (9—8—67) புதன்

தேரை விதியை நினைக்கிறது-- பாம்பு பசியை நினைக்கிறது!

வீரப்பன், நோய்வாய்ப்பட்டு மரணப்படுக்கையில் கிடந்தான்; அவனுக்கு மருத்துவம் செய்த மருத்துவர், அவன் பிழைப்பது அரிது எனக் கூறிவிட்டார்; இதைக் கேட்ட வீரப்பன், தன் குடும்பத்தின் எதிர்காலத்தை நினைத்து நினைத்துக் கண்ணீர் பெருக்கினான்; குழந்தைகளை எண்ணிக் குமுறிக் கதறினான்.

வீரப்பன் உயிருக்காகப் போராடிக்கொண்டிருப்பதையும், தன் மனைவியையும் குழந்தைகளையும் எண்ணி எண்ணி அழுதுகொண்டிருப்பதையும் கண்ட நெருங்கிய சுற்றத்தார்களில் சிலர், கண் கலங்கிக் கிடந்தனர். கல் நெஞ்சத்தையும் கரைக்கத்தக்க இந்த நிலையிலும், 'வீரப்பன் இறக்கமாட்டானா? அவன் சொத்தை அபகரித்துக்கொள்ளும் வாய்ப்பு நமக்குக் கிட்டாதா?' என்ற எண்ணத்துடன், கெடுமதியாளர்கள் சிலரும், வாய்விட்டு அழுது கொண்டிருந்தனர்.

★

ஜெயராஜ் என்னும் நன்னிலம் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினரை, சில பாவிகள் வெட்டிப் படுகாயப்படுத்திவிட்டனர். அக் கொலையினும் கொடியவர்களின் இக்கொடுஞ்செயலுக்குரிய காரணம் தெரியவில்லை.

ஜெயராஜ், மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அவருடைய காலைத் துண்டிப்பதன் மூலம் அவரைப் பிழைக்கவைக்க முடியும் எனத் தீர்மானித்து, அவர் காலைத் துண்டித்துவிட்டனர், மருத்துவர்கள்; 'இனி அவர் உயிருக்கு ஆபத்தில்லை; பிழைத்துக் கொள்ளுவார்' என்ற நற்செய்தியை, மருத்துவர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

ஜெயராஜ் அவர்களை வெட்டியது, வேதனை தரும் நிகழ்ச்சி—வன்மையாகக் கண்டிக்கத்தக்க கொடுஞ்செயல்.

குற்றவாளிகள் கண்டறியப்பட்டு, கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டும். அந்த வகையில், காவல்துறை, முனைந்து முயற்சிக்க வேண்டும்.

காவல்துறையும், காலந்தாழ்த்தாது தன் கடமையைச் செய்திருக்கிறது; 'குற்றவாளிகள்' எனச் சந்தேகிக்கப்படுகின்ற சிலரை, கைதும் செய்திருக்கிறது; மேலும் தீவிரமான புலன் விசாரணையிலும் ஈடுபட்டிருக்கிறது.

'ஜெயராஜ் வெட்டப்பட்டுவிட்டார்; மரணப் படுக்கையாக மருத்துவமனையில் இருக்கின்றார்; அவர் கால்களில் ஒன்று துண்டிக்கப்பட்டுவிட்டது' என்ற வேதனை தரும் செய்தியைக் கேட்டதும், தமிழக முதலமைச்சர் அண்ணா அவர்கள்—துன்பத்திலும் துயரத்திலும் மூழ்கிக் கிடக்கும் அவருக்கு—தமது ஆறுதல் செய்தியைத் தந்தி மூலம் அறிவித்திருக்கின்றார்.

அமைச்சர் கோவிந்தசாமி அவர்கள், மருத்துவமனைக்குச் சென்று ஜெயராஜ் அவர்களைச் சந்தித்து ஆறுதல் கூறியிருப்பதுடன், அவருடைய இரண்டு மனைவியர்களுக்கும் குழந்தைகளுக்கும் ஆறுதல் கூறியிருக்கின்றார்.

இதற்குப் பின்னர் அமைச்சர் கருணாநிதி அவர்களும், வெட்டுண்ட கால்களுடன் வேதனையில் மூழ்கிக்கிடக்கின்ற ஜெயராஜ் அவர்களைச் சந்தித்து, அவர் கண்ணீரைத் துடைத்திருக்கின்றார்; ஜெயராஜ் அவர்களின் குடும்பத்தினருக்கும் ஆறுதல் கூறியிருக்கின்றார்.

"கொடியவர்கள் கண்டறியப்பட்டு தண்டனைக்குள்ளாக்கப் படுவார்கள்; நீதி கிடைக்க வகை செய்வோம்" என இரண்டு அமைச்சர்களும், ஜெயராஜ் அவர்களுக்கு உறுதி அளித்திருக்கின்றனர்,

இவற்றிற்கு முன்னர், 'கொடியவர் சிலரால் வெட்டப்பட்டு—கால் துண்டிக்கப்பட்டு, ஜெயராஜ் அவர்கள் மருத்துவமனையில் மரணத்துடன் போராடிக் கொண்டிருக்கின்றார்' என்ற செய்தியைக் கேட்டதும், அனைத்திந்தியக் காங்கிரசுத் தலைவர் காமராசர் கட்டளைக்கிணங்கத் தமிழ் நாடு காங்கிரசுத் தலைவர் கிருஷ்ணசாமி (நாயுடு) அவர்களும், சட்டமன்ற எதிர்க் கட்சித் தலைவர் கருத்திருமன் அவர்களும் நாகை சென்றனர்; மருத்துவமனையில் படுத்துக்கிடக்கும் ஜெயராஜ் அவர்களைப் பார்த்திருக்கின்றனர்.

அந்தக் காங்கிரசுத் தலைவர்கள் இருவரும், தங்கள் கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினரான ஜெயராஜ் அவர்களின் பரிதாப நிலையைக் கண்டதும், தேம்பித் தேம்பி அழுதிருக்கின்றனர்; ஆறுதல் கூறியுள்ளனர்; குடும்பத்தினரையும் தேற்றியுள்ளனர்.

மனித இதயம் பெற்றுள்ள அனைவருக்கும் ஏற்படக்கூடிய இவ்வுணர்ச்சியை காங்கிரசுத் தலைவர்கள் இருவரும் வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றனர்; ஆறுதலும் கூறியிருக்கின்றனர்; அதுவும், மனிதப் பண்புக்கு உட்பட்டதே!

ஜெயராஜ் அவர்களை வெட்டிய கயமைச் செயலை, அந்த இரண்டு தலைவர்களும் கண்டித்திருக்க வேண்டும்; 'அக்கொலையினும் கொடியவர்களைக் கண்டுபிடித்துக் கடுந்தண்டனைக்குள்ளாக்க வேண்டும்' எனத் தமிழக அரசுக்கு—வேண்டுகோள் அல்ல—கட்டளை பிறப்பித்திருக்க வேண்டும்.

இவ்விரண்டு நியாயமான பணிகளைத்தான், இரண்டு காங்கிரசுத் தலைவர்களும் செய்திருக்க வேண்டும்—'செய்திருப்பார்கள்' என்றுதான் எவரும் எதிர்பார்ப்பர்.

ஆனால், அந்த இரண்டு காங்கிரசுக் கனவான்களுக்கும், அவ்விரண்டு பணிகளும், அற்பமானதாகப்பட்டிருக்கிறது—'தேவையற்றது' என்றும் பட்டிருக்கிறது.

வெட்டுண்ட கால்களுடன் ஜெயராஜ், மரணத்துடன் போராடிக்கொண்டு படுக்கையில் கிடக்கின்றார்—அவருடைய இரண்டு மனைவியரும், கணவனுக்கு ஏற்பட்ட கதியை நினைத்துக் கதறிக் கொண்டிருக்கின்றனர்—'அப்பா, அப்பா' எனக் குழந்தைகள் கூறிக்கொண்டிருக்கின்றன—இந்த வேதனைதரும் சோகக் காட்சியைக் கண்டதும், காங்கிரசுத் தலைவர்களான கிருஷ்ணசாமி—கருத்திருமன் ஆகிய இரண்டு கனவான்களுக்கும், மூளை சுறுசுறுப்பாகவும் விறுவிறுப்பாகவும் வேலைசெய்யத் தொடங்கியிருக்கிறது!

"ஜெயராஜ் அவர்களின் வெட்டுண்ட காலைக் காட்டி, இழந்துவிட்ட தமிழ் மக்களின் ஆதரவை மீண்டும் காங்கிரசுக் கட்சிக்குப் பெற முயற்சிக்க வேண்டும்" என்ற தீய நினைப்பு ஏற்பட்டுவிட்டது—இரண்டு காங்கிரசுக் கனவான்களுக்கும்!

> "வெட்டப்பட்டுக் கிடக்கும் வேதனையோடும் ஜெயராஜ் ஒன்று கூறினார்—'வெட்டப்பட்டகாலுடன் தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் வருவேன்; மீண்டும் காங்கிரசுக் கட்சியை ஆட்சிப்பீடத்தில் அமர்த்துவேன்' என்று ஜெயராஜ் என்னிடம் கூறினார். ஆம்! நண்பர் ஜெயராஜ் சிந்திய இரத்தம் மீண்டும் தமிழகத்தில் காங்கிரசுக் கட்சியின் வெற்றிக்கு அடிக்கல் நாட்டிவிட்டது."

இப்படி ஜெயராஜ் தம்மிடம் கூறியதாக, கருத்திருமன் அவர்கள், குடந்தையில் நடைபெற்ற காங்கிரசுக் கூட்டத்தில் குறிப்பிட்டிருக்கின்றார்.

ஜெயராஜ் அவர்களை வெட்டியது எதற்கு—விளக்கம் இனித்தான் கிடைக்க இருக்கிறது! வெட்டியவர்கள் யார்—தீர்ப்பில்தான் தெரியும் முடிவு!

இதற்குள்ளாகவே, ஜெயராஜ் இழந்துவிட்ட காலை—காங்கிரசுக் கட்சிக்குத் தமிழ் மக்களின் ஆதரவைப் பெற—மாற்றுப் பண்டமாக விற்பனை செய்ய, அரசியல் கடை திறக்கத் துணிந்துள்ளனர் கருத்திருமனும், கிருஷ்ணசாமி அவர்களும்!

சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவரான கருத்திருமன் அவர்கள், 'கம்பர் காவியத்தைக் கரைத்துக் குடித்திருப்பவர்' எனப்பாராட்டப் பட்டு வருபவராவார். 'இரக்கம் என்ற பொருளிலா அரக்கர்' என்ற கம்பரின் கவிதையை அவருக்கு நினைவுபடுத்துகிறோம்.

'தேரை விதியை நினைக்கிறது—பாம்பு பசியை நினைக்கிறது' என்பது பழமொழி. இதைப்போன்றே, ஜெயராஜ் அவர்கள் விதியை நினைக்க—கருத்திருமனும், கிருஷ்ணசாமி அவர்களும், இழந்துவிட்ட அரசியல் அதிகாரத்தை நினைத்துக்கிடக்கின்றனர்!

தலைப்பில் கூறிய வீரப்பன் கதை, இந்த இரண்டு கனவான்களின் மனவளத்தை விளக்குவதற்குப் போதும்!

—[illegible]

சும்மா இருப்பாரா சுப்பிரமணியம்!

வெளியூர்ப் பயணம் போகும் தாய்மார்கள் சிலர் கூறுவார்கள்—'எடுக்கிற பிள்ளையும் இல்லை; தூக்குகிற பிள்ளையும் இல்லை; உன்னையும் எப்படி அழைத்துச் செல்வேன்?' என்று!

இருப்பினும், தூக்கிச் செல்ல முடியாமல்—நடந்து செல்லவும் முடியாத பிள்ளைக்கு இந்த இரண்டுங்கெட்டான் பட்டம்!

எல்லோரையும் திருப்திப் படுத்துவதுபோல் பேசுவது அரிய கலைதான்! 'உப்பு இன்னும் சற்று இருந்தால் நன்றாக இருக்கும்; இல்லையென்றாலும் குற்றமில்லை' என்று கூறும்போது, சமைத்தவர்—சாப்பிட்டவர் இரு சாராரும் திருப்தியடைகிறார்கள்! ஆனால், 'பொதுவானவர்' எதிலும் படாமல் பேசுவது அப்போதைக்கு அவர்களுக்குப் புரியாது!

'திட்டக் கமிஷனுக்குப் போகப் போகிறார்' என்று ஏதோ பேச்சு அடிபட்டது; அதனால் சில காலம் பொறுத்துப் பார்த்தார்! அப்புறம், 'ஐ. நா. அலுவலகம் ஒன்றுக்குச் சிபாரிசு செய்யப்படுகிறார்' என்று பேசிக் கொண்டார்கள்—முன்னிலும் ஆவலாக இருந்தார்!

எல்லாம், அரசியல் புஸ்வாணமாகிவிட்டது! அதிலும், 'திட்டக் கமிஷனுக்குத் தென்னவர் ஒருவரே தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டார்' என்றதும், 'மத்திய அரசை இனி நம்பிப் பயனில்லை' என்று முடிவுசெய்துவிட்டார்......யில் தோல்விக்கு ஆளான முன்னாள் உணவு அமைச்சர் சி. சுப்பிரமணியம்!

"பட்டும் படாமலும் ஒரு சில தீவிர கருத்துக்களைச் சொல்லி 'ஜனரஞ்சக'ப் பேச்சாளராக ஆவது மாறுவோமே" என்று முடிவு செய்திருக்க வேண்டும்—'டிக்கெட்' போட்டு மக்களைக் கூப்பிட்டுப் பேசும் அளவுக்கு மாறிவிட்டிருக்கிறார்! சென்ற வார இறுதியில் சென்னையில் இரண்டு கூட்டங்களில் பேசிவிட்டார்! தொடாத தலைப்பு இல்லை!

விளையாட்டுக்களில் 'ஹாண்டிகாப்' என்ற ஒரு சலுகை காட்டுவதுண்டு. 'ஜனரஞ்சக'ப் பேச்சாளராக மாற விரும்பியிருக்கும் சுப்பிரமணியத்துக்கும், சில அரசியல் 'ஹாண்டிகாப்'புகள் தந்தாக வேண்டியிருக்கிறது!

அங்கே தன்னைக் கைவிட்ட மத்திய அரசைக் கண்டிக்கவும் முடியவில்லை; இருந்தாலும், அதற்கென்று இங்கே உள்ள கழக அரசுக்குக் கை கொடுத்துப் பேசவும் 'கட்சிக் கலர்' அனுமதிக்கவில்லை!

சிக்கித் தவித்திருக்கிறார், பாவம்—தந்தைக்கும்—கணவனுக்கும் இடையில் அவதிப்படும் திரைப்படக் கதாநாயகியைப் போல்!

மாநில அரசைக் குற்றம் கூறலாமென்றால், அது, முடிவில் புதுடில்லியின் தலையில் கை வைப்பதாகிறது! சில சமயங்களில், தான் வகித்துவந்த உணவு இலாகாவையே கண்டிப்பதாக இருக்கிறது!

சரி; மத்திய அரசை ஒப்புக்காகவேனும் ஓரிரு வார்த்தைகளில் புகழ்ந்து பேசலாமென்றால், அதை, உள்ளது உள்ளபடி வெளிச்சம் போட்டுக் காட்ட, இங்கே மாற்றுக் கட்சி அரசு இருக்கிறது!

இந்த இக்கட்டான நிலைமையின் காரணமாகத்தானோ என்னவோ — சுப்பிரமணியத்தின் பேச்சு, வெள்ளரிப் பழத்துக்குப் பூண் போட்டதுபோல் இருக்கிறது!

'பழத்தைக் காணோம்—பூண் மட்டும்தான் இருக்கிறது' என்பதுபோல் சுப்பிரமணியம் பேசியிருக்கிறார்—என்ன பேசியிருக்கிறார் என்பது தெளிவாகாது!

"உற்பத்திப் பெருகினால்தான் நாட்டில் பொருளாதார வளர்ச்சி ஏற்பட முடியும்—இன்னொரு நாணயக் குறைப்பு ஏற்படாமல் தடுக்கமுடியும்"—இதைத் தெரிந்து சொல்வதற்காக சி. சுப்பிரமணியம், புளியம்பட்டி சுவாமிநாதனிடம் தோற்றிருக்கவேண்டாம்; இன்னொரு முறை, பொருளாதாரத்தில் எம்.ஏ. படிக்கவும் தேவையில்லை!

கனவுக்கும்—காங்கிரசுக்காரர்களுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. அவர்கள் காண்பதை மட்டும், 'ஆசைக் கனவு'கள் என்பார்கள், மாற்றுக் கட்சியினர் காண்பதையோ, 'பகற் கனவு' என்று சொல்லுவார்கள்!

"உற்பத்தியை அதிகரிக்காமல், 'விலைவாசியைக் குறைப்போம்' என்று பேசுவது, வெறும் கனவு" என்று கூறியிருக்கிறார் சுப்பிரமணியம்!

"தேச அளவில் உள்ள 'மத்திய சர்க்கார்' பெரும் பகுதி ஒத்துழைப்பைத் தந்தாலொழிய, மாநில, அளவில் உள்ள விலை

(4-ம் பக்கம் பார்க்க)

சொந்த மாநிலத்தில் கவிழ்க்கப்பட்ட மிஸ்ரா

காங்கிரசைப் பலப்படுத்த டில்லிக்குப் போகிறாராம்!

புதுடில்லி, ஆக. 8—

மத்தியப் பிரதேச முதலமைச்சர் பதவியிலிருந்து கவிழ்க்கப்பட்ட திரு.டி.பி. மிஸ்ராவை, காங்கிரசுக் கட்சியை வலுப்படுத்துவதற்குப் பயன்படுத்துவதில் தலைமையமைச்சர் இந்திரா காந்தி, தீவிரமாக இருக்கிறாராம்!

மத்திய அரசியலில் திரு. டி. பி. மிஸ்ரா நுழைவதற்கு வசதியாக, மத்தியப் பிரதேசத்தைச் சேர்ந்த ஒரு காங்கிரசு எம்.பி., தனது மக்கள்சபை உறுப்பினர் பதவியை விட்டுக்கொடுக்கும்படியாகக் கேட்டுக்கொள்ளப்படலாம் என்று தெரிகிறது.

மாநில அளவில் காங்கிரசுக் கட்சியை வலுப்படுத்த முடியாமல் பதவியைப் பறிகொடுத்துவிட்டு வெறும் ஆளாக இருக்கும் மிஸ்ரா, காங்கிரசுத் தலைமையையே வலுப்படுத்தப்போகிறாராம்!

தமிழகத்தில் உள்ள தரிசு நிலம்

திருச்சி, ஆக. 9—

"தமிழகத்தில் சாகுபடிக்குத் தகுதியாக எவ்வளவு தரிசு நிலம் இருக்கிறது என்பது பற்றி சிறிது காலத்துக்கு முன் விசாரித்தேன; எனக்குப் புள்ளிவிவரங்கள் கிடைக்கவில்லை; சுமார் 17 இலட்சம் ஏக்கர் தரிசு நிலம் இருக்குமென் நினைக்கிறேன்" என்று ஆளுநர் உஜ்ஜல் சிங் கூறினார்.

வெந்த புண்ணில் வேல் பாய்ச்ச வேண்டாம்

தமிழர்கள் கிளர்ந்தெழுந்தால் வெற்றி கிட்டும் வரையில் ஓயமாட்டார்கள்

தமிழக வாணிப-பொருளாதார மேம்பாட்டுக்குத் தூத்துக்குடி திட்டம் நிறைவேற்றப்பட வேண்டும்

நாடாளுமன்றத்தில் அன்பழகன் உரிமை முழக்கம்

“ஏற்கனவே, ‘சேலம் திட்டம் இல்லை’ என்று கூறித் தமிழக மக்களின் உணர்வைப் புண்படுத்திய பிறகு, தூத்துக்குடித் திட்டத்தையும் ‘முன்னர் உறுதி செய்யப்பட்டவாறு தொடங்கப்போவதில்லை’ என்றால், தமிழக மக்களுக்கு வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சுவது போலாகும்!

“தமிழக மக்கள் கிளர்ந்தெழ மாட்டார்கள்; எழுந்தால் குறிக்கோளை அடையும் வரை ஓயமாட்டார்கள்! அங்குள்ள அமைச்சரவை மக்களின் உரிமையைக் காத்து வருவதனால் ‘இதற்குத் தேவையிராது’ என்று கூற விழைகிறேன்.

“கொடுத்த உறுதிமொழியினின்று மத்திய ஆட்சி மாருது என நம்புகிறேன்; ஆனால், மறைந்துபோன தலைமையமைச்சர்களின் நினைவுகளை—அவர்கள் அளித்த வாக்குறுதிகளைக் காப்பதைக் காட்டிலும் ‘மீறுவதிலேதான் நிலைபெறுகிறார்கள் இங்குள்ள ஆட்சியாளர்கள்’’

என்று, நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவர் பேராசிரியர் க. அன்பழகன் மக்களவையில் பேசுகையில் கூறினார்.

தூத்துக்குடித் துறைமுகத் திட்டம் குறித்துத் தாம் எழுப்பிய விவாதத்தில் கலந்துகொண்டு திரு. அன்பழகன் பேசியதாவது:—

திடீரென முளைத்ததல்ல தூத்துக்குடித் திட்டம்

“தூத்துக்குடித் துறைமுகத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் மத்திய அரசு எந்த அளவுக்கு உண்மையான அக்கறை கொண்டுள்ளது என்பது பற்றி தமிழக அரசு அண்மையில் வெளியிட்டுள்ள ஐயங்களைப் பற்றியும், தமிழக மக்கள் கொண்டுள்ள ஆழ்ந்த உணர்ச்சியினையும் அமைச்சர் அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.

தூத்துக்குடி, நீண்ட நெடுங்காலமாகத் துறைமுகமாக இருந்து வருகிறது.

பண்டைத் தமிழ் மன்னர்கள் காலத்திலிருந்தே மேலைநாடுகளுக்கும், கீழைநாடுகளுக்கும் பண்டங்களை ஏற்றுமதி செய்யும் சிறந்த துறைமுகமாக விளங்கியது.

வெள்ளையர்கள் காலத்தில்கூட இதனை வளர்ச்சியுறச் செய்யப் பல திட்டங்கள் தீட்டப்பட்டன. 1919-ல் ஒரு திட்டம் இருந்தது; ரூ. 30 இலட்சம்கூடச் செலவழிக்கப்பட்டது. தற்கால ரூபாயின் மதிப்பில் 10 கோடி ரூபாய்க்குமேல் இருக்கும் என்று கருதுகிறேன். இத்துறைமுகத்தை வளர்க்க இன்னும் பல திட்டங்களைக்கூட வைத்திருந்தனர். ஆனால் எவ்வாறோ இந்தத் துறைமுகம், ஆழ்கடல் துறைமுகமாக அல்லது எந்தத் தட்பவெப்ப நிலைக்கும் ஏற்ற துறைமுகமாக வளராது போய்விட்டது!

விடுதலை பெற்ற பின்னர்கூட இதைப் பற்றிய கோரிக்கை இருந்துவந்தது. மாநில ஆட்சி தூத்துக்குடித் துறைமுகத்தை ஆழ்கடல் துறைமுகமாக்க மத்திய ஆட்சியை அடிக்கடி வற்புறுத்தி வந்திருக்கிறது.

அதிலும் இதனை, அழகுமிக்க துறைமுகமாக ஆக்குவதோடு, ‘அந்த வட்டார மக்களின் பொருளாதார வளர்ச்சிக்கும் பெரிதும் உதவும்’ என்ற காரணத்திற்காகவும் சிறப்பாக வற்புறுத்தப்பட்டது.

அவர்கள் வாழ்வும் எதிர்காலமும் துறைமுகத்தின் வளர்ச்சியில் மேலும் மேலும் கட்டுண்டு வருகிறது.

1959-லேயே மத்திய ஆட்சிகூட இதைப் பற்றிக் கவனிப்பதாகக் கூறியது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்போது நேரு அவர்கள், இத்திட்டத்தை நிறைவேற்றுவதாகக் கூறினார். ஏறத்தாழத் தொடங்கிக்கூட விட்டார் — கொள்கையளவில்!

பிறகு, மறைந்த தலைமையமைச்சர் லால்பகதூர் சாஸ்திரி, 1964 நவம்பரில் தொடங்கிவைத்தார்.

இத்திட்டம் திடீரென முளைத்தது அல்ல! இத்திட்டத்தைப் பற்றிப் பல அறிக்கைகள் உள்ளன!

1954-ம் ஆண்டில் சாட்டர்ஜி திட்டம்—1955-ல் சேது சமுத்திரத் திட்டக் குழுவின் வேலைத் திட்டம்—1959-ல் சேக்கோ, மத்ராணி திட்டம் — இறுதியாக 1960-ல் இடைநிலைத் துறைமுக வளர்ச்சிக் குழுவின் அறிக்கை —எனப் பல உள்ளன. இவையெல்லாம் இத்திட்டத்தினை ஆதரிக்கின்றன.

இடைநிலைத் துறைமுக வளர்ச்சிக் குழுவின் அறிக்கையினால் திட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டு ஓரளவிற்கு செயல்படுத்தவும் பட்டது.

அறிக்கைகளில் கொடுக்கப்பட்ட கணக்கும் — தூத்துக்குடித் துறைமுகத்தின் போக்குவரத்துக் கணக்கும் வேறுபடுவதனாலேயே, இத்திட்டம் தொடங்கப்பட்ட பிறகும்கூட அமைச்சுத் துறை, ‘மேலும் தொடருவதா—வேண்டாமா என்று ஊசலாடிக்கொண்டிருக்கிறது எனக் கருதுகிறேன்.

‘இத்திட்டத்தை நிறைவேற்றியே தீரவேண்டும்’ என்று உளமாரக் கருதுகிறதா இந்த அமைச்சு என்று ஐயப்படுகிறேன்.

பொருளாதார வளர்ச்சிக்குப் பெருநிதி போன்றது!

இத்திட்டத்தை வணிக நோக்குடனே, வட்டிக்காரர்களின் நோக்குடனே பார்க்கக் கூடாது!

வட்டார நலனுக்கும், தமிழக வளர்ச்சிக்கும் திட்டமிட்ட ஒன்ருக இதனை எடுத்துக்கொள்ள வேண்டும்.

தமிழக முதலமைச்சர், ‘தமிழகத்திற்குக் கட்டாயம் தேவைப்படும் ஒன்று இது’ என மிகத் தெளிவாகக் கூறியுள்ளார்.

எதிர்காலத்தில் சேதுசமுத்திரக் கால்வாய்த் திட்டம் உருவாகப் போகிறது; அது, மேலைக் கடற்கரைக்கும்—கீழைக் கடற்கரைக்கும் உள்ள தொலைவைக் குறைக்கும்; கடலோரக் கப்பல் வாணிபத்தையும், வெளிநாட்டுக் கப்பல் வாணிபத்தையும் பெருக்கும்.

இதனைக் கருத்தில் கொண்டு பார்க்கும்போது நம் நாட்டின் கடல் வாணிபப் பொருளாதார வளர்ச்சிக்குக் கிடைத்த பெருநிதியாகத் தூத்துக்குடித் திட்டம் நிலவும் என நம்புகிறேன்.

அது மட்டுமல்ல; நாட்டின் தென்பகுதியில் இத்துறைமுகம் வளர்ந்தால், ஏற்றுமதி இறக்குமதி வாணிபமும், வெளிநாட்டு வாணிபமும் பெரும் அளவுக்கு வளரும்!

உறுதியற்ற நிலையில்தான் ஐயப்பாடு எழுகிறது!

முதலாளிகளோடு ஒத்துழைக்கும் தொழிலாளர்களைக் கொண்ட சிறந்த மாநிலங்களில் தமிழகமும் ஒன்று என்று உறுதியாக நம்புகிறேன்.

தொழிலாளிகள், தொழில் முதலாளிகளோடு ஒத்துழைக்கிறார்கள்; எனவே, நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு நல்ல சூழ்நிலை உள்ளது.

தமிழக அரசு இத்திட்டத்திற்கு வசதிகளைச் செய்து தர முன்வந்துள்ளது. தொழில்மயமாக்கல்—சிறு தொழில்கள் பலவற்றைத் தொடக்குதல்—இணைப்புச் சாலைகள் ஏற்படுத்தல்—மின்சாரம் வழங்கல்—தண்ணீர் வழங்கல் ஆகிய வசதிகளைத் தூத்துக்குடித் துறைமுகப் பகுதிக்குச் செய்துதரும்.

தமிழக அரசு ஏறத்தாழ ஒரு கோடி ரூபாய் செலவழித்துள்ளது. தமிழகம் இவ்வளவு செலவழித்துள்ளபோதிலும், மத்திய அரசு, திட்டத்தைத் தொடர்ந்து நடத்தும் என்ற உறுதி இல்லை.

இவ்வாறு ஐயம் எழும்போது—பொதுமக்களிடத்தில் வதந்திகள் கிளம்பப்படும்போது—தமிழக மக்கள் கிளர்ச்சியுறுகிறார்கள்.

பரிவு இருந்தது--ஆனல் பலன் பெறவில்லை!

சூலை 23-ம் நாம் நாள் தமிழகம், ‘எழுச்சி நாளை’க் கொண்டாடியது என்பதை இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அன்று மாறுபட்ட அரசியல் கட்சித் தலைவர்கள் பெரும்பாலோர் ஒன்று கூடினர்; நூற்றுக்கணக்கான கூட்டங்கள் நடத்தினர்; மக்கள் இலட்சக்கணக்கில் கூடினர்: ‘மத்திய ஆட்சி’ திட்டத்தை மேற்கொண்டு நடத்த வேண்டும்’ என்று கோரும் தீர்மானத்தை ஒருமுகமாக நிறைவேற்றினர்.

எழுச்சி நாளன்று சேலம் உருக்காலைத் திட்டத்தைக் கோரியும் தீர்மானம் நிறைவேற்றினர். அதைப் பற்றிப் பேச இதுவல்ல நேரம். அதிலும், போக்குவரத்து அமைச்சரிடம் கோரும் கோரிக்கையாக அது இருக்க முடியாது.

நீண்ட காலமாகச் சேலம் உருக்காலைக் கோரிக்கை இருந்து வருகிறது. அங்கிருந்த காங்கிரசு ஆட்சிகூடத் தமிழக மக்களுக்கு அதைத் தொடங்குவதாக வாக்குறுதி தந்தது!

சேலம் உருக்காலைக்குப் பரிவு காட்டும் நிலை இருந்தது; இருந்தும் அது நடைபெற்ற ஒன்ருக ஆகவில்லை! மத்திய ஆட்சியும் ஏற்றுக்கொள்ளவில்லை! மாநில அரசும் மேலும் செல்ல அனுமதிக்கப்படவில்லை!

இவையெல்லாம் தமிழக மக்களின் உணர்வை ஏறத்தாழ புண்படுத்திவிட்டன!

புள்ளிவிவரங்களையே மெய்ப்பிக்க முயற்சி?

தூத்துக்குடித் துறைமுகத் திட்டம் நாட்டில் பொருளாதார வளத்தைப் பெருக்க உதவுமே ஒழிய, எந்த வகையிலும் தோல்வியையோ, இழப்பையோ உண்டாக்காது என்பதனை மெய்ப்பிக்க என்னிடத்தில் புள்ளிவிவரங்கள் உள்ளன.

தேசியப் பொருளாதார ஆராய்ச்சிக் குழு, 1958–59-வது ஆண்டு ஆய்வில், ‘தூத்துக்குடித் துறைமுகத்தின் போக்குவரத்துத் திறன் 2.4 மில்லியன் டன்கள்’ என்று கூறுகிறது.

நான்கு அல்லது ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு அந்தக் கணக்கில் ஐயம் எழுந்தது; அது, ‘2 மில்லியன் டன்கள்தான்’ என்று கணக்குக் காட்டினர்.

பிறகு இன்னொரு கணக்குத் தரப்பட்டது—‘2 மில்லியன் டன் போக்குவரத்தில் இந்தத் துறைமுகத்தில் 1.7 மில்லியன் டன்னும், 0.3 டன் ஏற்கனவே அங்கே உள்ள துறைமுகத்திலும் இருக்கும்’ என்று!

இன்னும் ஒரு கணக்கு அமைச்சரால் இப்போது தரப்படுகிறது—‘1.55 மில்லியன் டன்தான்’ என்று!

ஆற்றுமையைப் புலப்படுத்திய அலுவலர்!

இதையெல்லாம்விட இன்னும் மேலாக, அவர் துறையிலுள்ள அலுவலர் ஒருவர்—எதையுமே குறைத்து மதிப்பிடுவதில் வல்லுநர்!

நான் கருதுகிறேன்—யார் மீதாவது அல்லது எந்தத்துறை மீதாவது உள்ள பகைமைக்கு ஏற்ப—அவர் விருப்பு-வெறுப்புக்கேற்பக் கணக்கைத் தேடிக் கண்டுபிடித்துத் தருபவர்—ஒரு கணக்கை, ‘இறுதியான கணக்கு’ என்று தருகிறார்—தேசியப் பொருளாதார வளர்ச்சிக் குழுவினைக் குறைத்து மதிப்பிடுவதற்காக—அதன் உண்மையான ஆராய்ச்சிப் பணியைக் குறைத்து மதிப்பிடுவதற்காக இந்த அலுவலர்—அவர் பெயரைச் சொல்ல விரும்பவில்லை—ஆனால் இதைப் பற்றிக் கடைசியாக ஆராய்ந்த அலுவலகத்தைத்தான் நான் குறிக்கிறேன் என்பதை அமைச்சரவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும்—‘1.55 மில்லியன் டன்கள்தான்’ என்று கூறினார்.

நான் குற்றஞ்சாட்டவிரும்பவில்லை. தேசியப் பொருளாதார ஆராய்ச்சிக் குழுவின் துணை இயக்குநர், தலைவராகப் போக விரும்பினார்; ஆனால், அந்தப் பதவி கிடைக்கவில்லை; எனவே, அதன் கண்டுபிடிப்புகளுக்கு தனது கருத்தை கூறிதன்னுடைய ஆற்றுமையை புலப்படுத்திக்கொண்டார் என்று தெரியவருகிறது!

ஆலோசனை இனி எதற்கு?-- உண்மையை உணருக!

ஆனால், தானே பொருளாதார வல்லுநராகவும், நாட்டை நன்குக உணர்ந்தவராகவும், தமிழகத்தோடு. ஒருவகையில் எதிர்ப்புக்கொள்ள வேண்டியவராகவுமுள்ள அமைச்சர் அவர்கள், அவருடைய அமைச்சகத்தின் ஆலோசனையை மட்டும் நம்பியிராமல், அவருக்குத் தரப்பட்ட புள்ளிவிரைங்களில் எவ்வளவு உண்மை இருக்கிறது என்பதைக் கண்டுபிடிக்கவேண்டுமென்று விரும்புகிறேன்.

1964-லேயே ஏற்றுமதி—இறக்குமதி -- அதாவது. போக்குவரத்துத் திறன் 1 மில்லியன் ஆகும்.

அப்படியானால், ஆண்டிற்குச் சாதாரணத் துறைமுகமானால் 5 சதமும், முழு நிறைவுற்ற கடற்கரைத் துறைமுகமானால் 10 சதமும், ஏற்ற இறக்க காப்பாக வைக்க வசதியுடைய தட்ப வெப்ப நிலைகளுக்கேற்ற துறைமுகமானால் ஏற்றுமதி—இறக்குமதி அளவு 8 அல்லது 4 மடங்கு ஆகும்.

இவற்றையெல்லாம் கவனத்தில் கொண்டு, இத்திட்டத்தை அனுசரணையாக ஆராய்ந்து தமிழக மக்களின் மனதில் மேலும் ஐயப்பாட்டைத் தோற்றுவிக்காது முழுமையாகச் செயல்படுத்த அமைச்சர் முன்வருவார் என்று நம்புகிறேன்.

எதையும் அதன் உண்மையான மதிப்பினைக் கொண்டே திர்மானிக்க வேண்டும், வெறும் பொருளாதார அடிப்படையில் மட்டும் முடிவுசெய்யலாகாது!

பொருளாதாரப் புள்ளிவிவரங்கள் பெரும்பாலான நேரங்களில் குழப்பதில் ஆழ்த்துகின்றன என்பதை நாமறிவோம்!

ரூபாயின் மதிப்பு விழ்ந்து விட்டது! பணவீக்கம், நாட்டையே உருமாற்றியுள்ளது! பொருளாதார மந்தம் கப்பிக்கொண்டுள்ளது!

இச்சூழ்நிலையில். இத்துறை அமைச்சரும், நிதி அமைச்சரும் அரசினரால் ஏற்கனவே ஏற்றுக்கொள்ளப்பட்ட திட்டமிட்ட வேலைகளில் தலையிடாது கட்டுப்படுத்திக்கொள்வதைத் தங்களுடைய கடமையாகக் கொள்வார்கள் என்று கருதுகிறேன். தேவையான பணத்தை அனுமதித்துத் திட்டங்களைச் செயல்படுத்துமாறு பார்த்துக்கொள்வதைத் தங்களுடைய கடமையாகக் கொள்ளவேண்டுகிறேன்.

‘தேவையான பணம்’ என்றால் இவ்வாண்டிற்கு ஒதுக்கப்பட்ட ஒரு கோடி ரூபாயை அல்ல; அது போதவே போதாது. அரசினர், குறைந்தது ரூ. 5 கோடி—முன்பு திட்டமிட்டபடி பணத்தை ஒதுக்க முன்வர வேண்டும்.

இந்த அரசு இப்பணத்தைக் காண முடியாவிட்டால், ஜப்பானிடமிருந்து கடனாகப் பெறலாம்; தூத்துக்குடித் துறைமுக வளர்ச்சிக்குப் பணம் உதவ அது ஆவல்கொண்டுள்ளது; அத்துறைமுகத்தின் மூலமாக உப்பும், பிற இரசாயனப் பொருள்களும் பெற்றுக்கொள்ளவும் விருப்பம் தெரிவித்துள்ளது.

ஜப்பான் இதற்குப் பதிலாகத் தூத்துக்குடித் துறைமுக வளர்ச்சிக்கு உதவ முன்வந்துள்ளதாகத் தமிழக முதலமைச்சர் தெளிவான முறையில் குறிப்பிட்டுள்ளார்.

இதில் விரைந்து பண ஒதுக்கீட்டைப் பெற்று — விரைவாக அமுல் செய்து—தமிழக மக்களின் தற்போதைய கிளர்ச்சியைத் தணிக்கும் பணியை அமைச்சர் பெற வேண்டும் என விரும்புகிறேன்”

பணக்காரரிடம் நெருங்க அச்சமா?

வசூலிக்கப்படாத வருமான வரி 1965-ல் ரூ. 323 கோடி!

புதுடில்லி, ஆக. 7—

ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்துக்கொண்டே வருகிற வருமான வரி நிலுவை குறித்துக் கவலை தெரிவித்துள்ள நாடாளுமன்ற பொதுக் கணக்குக் குழு, நிலுவையை வசூலித்திடத் தீவிர வழிவகைகளைக் கண்டுபிடிக்கும்படி அரசைக் கேட்டுக்கொண்டுள்ளது.

நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் பொதுக் கணக்குக் குழு அளித்துள்ள அறிக்கையின்படி, 1965 மார்ச் 31-ம் நாளுடன் முடிந்த ஆண்டில் வருமான வரி நிலுவை ரூ. 322 கோடியே 72 இலட்சமாக இருந்தது.

1964-ம் ஆண்டு பாக்கி ரூ. 282 கோடியே 37 இலட்சமாக இருந்தது.

1963-ல் 270 கோடியே 43 இலட்சமாக இருந்தது.

சும்மா இருப்பாரா சுப்பிரமணியம்! (2-ம் பக்கத் தொடர்ச்சி)

வாசியைக் குறைப்பது முடியாத காரியம்'' என்று அவர், மறைமுகமாகக் கூறியிருக்கிறார். இதைக் காங்கிரசார், தங்கள் அந்தரங்க யோசனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்.

இந்தக் 'கண்டுபிடிப்பு'களுக்குள்ளாகவே, 'சாமி மலையேறிவிட்டது' — சுப்பிரமணியம் தன்னுணர்வு பெற்றுவிட்டார்! அடித்தாலும் அணைத்தாலும், கதியை நிர்ணயிப்பது காங்கிரசுதானே!

"உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்று சொல்லும்போது — வெறும் கிளர்ச்சிகளாலும், ஊர்வலங்களாலும், ஆர்பாட்டங்களாலும் செய்துவிட முடியாது''—கழகத்தின் எழுச்சி நாள், அவருக்கு, அரசியல் உணர்ச்சியைக் கொடுத்திருக்கிறது!

"பசிக்கிறது -- பால் குடிக்க வேண்டுமென்றால், சேர்ந்து உழை'' என்றுளாம்—பக்குவம் பெருத தாய் ஒருத்தி!

'இங்கிதம்' புரியாதவளாக இருந்தால், குழந்தை அழத்தான் செய்யும்! தாயிடம் பெற வேண்டியதை, தாயிடம்தான் பெறமுடியும்!

நேரம் – சூழ்நிலை புரியவில்லையென்றால், புதுடில்லிக்கு – அழுதோ, அதட்டியோ கேட்டால்தான் தெரிகிறது!

இடது கை கொடுப்பதை வலது கை தெரியாத நிலை இருப்பதைப்போல், இங்கேயே செய்து முடிக்க – முடிந்த காரியங்களை, கழக ஆட்சி, கேட்காமலே கொடுத்ததைப் போல் செய்திருக்கிறது!

"அம்மா தப்பாக எடுத்துக்கொள்வார்கள்; எனவே, அப்போதைக்கப்போது உன்னை அடிப்பதுபோல அடிப்பேன்'' என்றானும், ஒரு கணவன் – மனைவியிடம்!

"என்ன – பேச்சு ஒரு மாதிரியாகப் போகிறது; இங்கே இருப்பதாக உத்தேசமில்லையா?'' என்று, 'மேலிடம் கேட்டுவிடுமோ' என்ற அச்சத்தில் சுப்பிரமணியம், அப்போதைக்கப்போது கண்டனக் கணைகளையும் சேர்த்துக் கொள்ளுகிறார்! வேறெதுவும் விசேடக் காரணமில்லை!

மக்களுக்கும் திருப்தியாக எதையாவது பேசவேண்டுமே – அதையும் செய்திருக்கிறார் முன்னாள் உணவு அமைச்சர்!

"உணவுப் பிரச்சினையைப் பொறுத்தமட்டில் எப்போதும் நாம் வெளிநாட்டையே நம்பியிருக்க முடியாது; ஆதலால் நம் நாட்டிலேயே உற்பத்தியைப் பெருக்க வேண்டும்!''—கூறியிருப்பது சுப்பிரமணியம்!

"மாடு என்பது, ஒரு நான்கு கால் வீட்டுப் பிராணி'' என்ற வரியுடன் வியாசத்தைத் துவங்கும் பள்ளிக்கூட மாணவனைப் போல் பேசியிருக்கிறாரே– என்று நினைக்கவேண்டாம்!

'போனால் போகட்டும்' என்றோ, 'விட்டால் வேறு ஆள் இல்லை' என்றோ சில காலம் நாட்டின் உணவு அமைச்சராக இருந்தவரின் முதிர்ந்த கருத்துடைய பேச்சு இது! இந்த உண்மையைக் கண்டுபிடிக்கத்தான் இத்தனை ஆண்டுக்காலமாக அவர், 'அமைச்சர்கள்' பதவி வகித்தாரா – அல்லது, இந்த உண்மையைத் தெரிந்துகொண்டதே சென்ற தேர்தலில் தோற்றதனாலா–என்பதுதான், உண்மையில் ஆராய்ச்சிக்குரிய விஷயம்!

"சுதந்தரம் பெற்ற 20 ஆண்டுகளிலேயே எல்லா முன்னேற்றமும் பெற்றுவிட முடியாது'' என்று ஓரிடத்தில் குறிப்பிட்டிருக்கும் சுப்பிரமணியம், தொடர்ந்து, 'மக்களுக்கு அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும்; உணவு–உடை–குடியிருப்பு வசதி போன்றவை குறைந்தபட்ச அளவாவது கிடைக்க வேண்டும்' என்று—ஆண்டவனிடம், 'அது வேண்டும்; இது வேண்டும்; எல்லாம் வேண்டும்' எனப் பாடும் பக்தர்களைப்போல் — பேசியிருக்கிறார்!

"உலகப் போரின் காரணமாக நம் கண் முன்னாலேயே சர்வநாசத்துக்குள்ளான ஜப்பானும், ஜெர்மனியும், இதே இருபது ஆண்டுக்காலத்தில் இந்தியாவுக்கும், உலகத்துக்கும் உதவிக்கொண்டிருக்கும் நாடுகளாகிவிட்டிருக்கும்போது 'இருபது ஆண்டுக் காலம் போதாது — அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு' எனப் பேசியிருக்கிறாரே'' என்று அரசியல் பார்வையாளர்கள் கேள்விக்குறி எழுப்புவது ஒருபுறம் இருக்கட்டும்!

"இருபதாண்டுக் காலத்தில் நாங்கள் செய்த இலட்சணம் இதுதான்; பெரும்பாலான மக்களுக்கு உணவும், உடையும், இருப்பிடமும்கூட இனித்தான் பூர்த்தி செய்யப்பட வேண்டும்'' என்ற கருத்தில் அல்லவா பேசியிருக்கிறார்?

"மனிதர், பேசாமல் ஜெயித்திருக்கலாம்; தோற்றதால் வந்த பயனா இது?'' என்று காங்கிரசு மேலிடம் பதை பதைத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை!

ஏனெனில், சுப்பிரமணியம் சாதாரணமானவரல்லர்!

"ஒரு பத்து ஆண்டுக்காலம் பொறுங்கள்; ஏதேனும் நன்மை — எப்படியாவது முன்னேற்றம் கிடைக்கவில்லையேன்றால், நானும் உங்களுடன் சேர்ந்து கேட்கிறேன்—திராவிட நாடு பிரிவினை''

என்று 1957-ல், கழகத்தைப் பார்த்துச் சட்டமன்றத்தில் வேண்டுகோள் விட்டவராயிற்றே!

எனவேதான், 'பிரிவினை' என்ற பேச்சு இல்லை—என்று அண்ணா அவர்கள் அதே சட்டமன்றத்தில் 'முதலமைச்சர்' என்ற நிலையில் எடுத்துக் கூறியபின்னரும், சுப்பிரமணியம், பழைய ஆவேசத்தைத் தீர்த்துக்கொள்வதற்காக, 'கழகம், பிரிவினையை விட்டுவிடவில்லை' என்று அவ்வப்போது பேசிவருகிறார் என்று கேள்வி!

—எஸ். ஆர்.

மாநகராட்சி கூட்டு உறுப்பினராக ஏ. எஸ். இராமன்

சென்னை, ஆக. 8—

சென்னை மாநகராட்சி கூட்டு உறுப்பினராகக் கழகத் தோழர் ஏ. எஸ். இராமன் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

மாநகராட்சியின் 11-வது வட்டார (தியாகராயநகர்ப் பகுதி) உறுப்பினராக இவர் இயங்குவார்.

தோழர் ஏ. எஸ். இராமன் 1932-ம் ஆண்டுமுதல் சுயமரியாதை இயக்கம், நீதிக் கட்சி, திராவிடர் கழகம் ஆகியவற்றில் தொடர்புகொண்டு பொதுப் பணியாற்றியிருக்கிறார். 1949-ல் தி. மு. கழகம் துவங்கியதிலிருந்து கழகத்தில் ஈடுபட்டு பணியாற்றி வருகிறார். பொதுக்குழு உறுப்பினராகவும் இருந்திருக்கிறார்.

1959-ல் நடந்த மாநகராட்சித் தேர்தலில் 17-வது வட்டத்தில் தி.மு.க. வேட்பாளராகப் போட்டியிட்டு மிகக் குறைந்த வாக்கு வேறுபாட்டினால் வெற்றி வாய்ப்பை இழந்தபோதிலும் மனந்தளராது தொடர்ந்து பொதுத் தொண்டாற்றிவருகிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை-13.) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

நீதிபதிகளின் நீங்காக் கடமை

சட்ட அமைச்சர் மாதவன் அறிவுறுத்தல்

சிதம்பரம், ஆக. 6—

"நீதித் துறையின் சுதந்தரத்தைப் பேணத் தமிழக அரசு தன் அதிகாரத்திலுள்ள எல்லாவற்றையும் செய்யும்.

"தக்க நீதி வழங்குவதில் நீதிபதிகளுக்கு எந்தக் குறையும் இல்லாதபடி பார்த்துக்கொள்ள வேண்டிய தேவையையும் அரசு உணர்ந்திருக்கிறது.

"நீதிமன்றங்களில் வழக்குகள் வேகமாக முடிய வேண்டும். வழக்குகளை விரைந்து முடிப்பதோடு மட்டும் வழக்கறிஞர்களின் பங்கு முடிந்துவிடவில்லை; நீதி—நியாயம் கிடைக்கும்படிச் செய்வதிலும் அவர்களுக்குப் பங்கு உள்ளது.

"நீதியை காலத்தே பெறுவிடின் பொதுமக்களுக்கு நீதிமன்றங்களில் நீதியைப் பெறுவதிலுள்ள நம்பிக்கை தகர்ந்துவிடும்.

"நீதியை வழங்குவதோடு அவை நின்றுவிடக்கூடாது. நீதியையே தாம் பெறுவதாக மக்களை உணரவைக்க வேண்டும்.

"மத்திய—மாநில உறவைப் பொறுத்து, இந்திய அரசியல் சட்டம் கூட்டாட்சி முறையைக் கொண்டிருக்கிறது; ஆனால், நடைமுறைப் பணிகள் அனைத்திலும், மாநிலங்களின் முன்னேற்றத்தைத் தடுக்கக்கூடிய ஒற்றை முறை ஆட்சியே உள்ளது.

"அரசியல் சட்டத்தில், உயர் நீதி மன்றங்கள், மாநில நீதித் துறை ஆகியவற்றின் பணிகள் தெளிவாக வரையறுக்கப்படவில்லை"

என்று சட்ட அமைச்சர் செ. மாதவன், சிதம்பரம் வழக்கறிஞர்கள் சங்கத்தில் பேசும்போது குறிப்பிட்டார்.

இக்கூட்டத்திற்கு அண்ணாமலைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பி. சந்திரா (ரெட்டி) தலைமையேற்றார்.

சங்கத் தலைவர் நாகராசன் வரவேற்றார்.

செயலாளர் வழக்கறிஞர் தில்லைவில்லாளன் நன்றி கூறினார்.

நாகை -- தூத்துக்குடி விரைவுப் பேருந்து

சென்னை, ஆக. 9—

ஆகஸ்டு 10-ந் தேதிமுதல் நாகப்பட்டினத்திற்கும் — தூத்துக்குடிக்கும் இடையே புதிதாக இரண்டு நெடுந்தொலைவு விரைவுப் பேருந்து வண்டிகளை விட, மாநில அரசின் போக்குவரத்துத் துறை முடிவு செய்திருக்கிறது.

இந்த வண்டிகள், திருவாரூர்—மன்னார்குடி—பட்டுக்கோட்டை — ஆலங்குடி — புதுக்கோட்டை — திருமயம்—திருப்பத்தூர்—மேலூர் —மதுரை—அருப்புக்கோட்டை — எட்டையாபுரம் வழியாகச் செல்லும்.

சென்னைத் தீ விபத்துத் துயர் தணிப்புக் குழுவினர்
அளிக்கும்

திரைப் பட விழா

சென்னை பாலர் அரங்கில்

தினசரி 2 காட்சிகள் (மாலை 2-30 மணி—மாலை 6 மணி)

10--8--67: 'மறக்கமுடியுமா'

[6 மணிக் காட்சி திருமதி இராஜசுலோசனா தலைமையில் நடைபெறும்]

நுழைவுக் கட்டணம்: ரூ. 3, 2, 1; சீசன் டிக்கெட்: ரூ. 25

அண்ணாவுக்குத் தங்கச்செங்கோல்

தூத்துக்குடியில் வழங்கப்படும்

தூத்துக்குடி, ஆக. 7—

தூத்துக்குடிக்கு 13—8—67 அன்று வருகைதரவிருக்கும் முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களுக்குச் சிறப்பான வரவேற்பளிக்க நகர தி. மு. கழகம் ஏற்பாடு செய்துவருகிறது.

நகர தி. மு. க. சார்பில் அன்று மாலை 7-மணிக்கு வ. உ. சி. திடலில் நடைபெறவிருக்கும் வரவேற்புப் பொதுக்கூட்டத்தில் நெல்லை மாவட்ட தி.மு.க. செயலாளரும், தூத்துக்குடிச் சட்டமன்ற உறுப்பினருமான தோழர் எம். எஸ். சிவசாமி, 30 பவுனில் செய்யப்பட்ட தங்கச் செங்கோலை அண்ணா அவர்களுக்கு வழங்குவார்''

என்று நகரச் செயலாளர் இரா. கிருட்டினன் அறிவிக்கிறார்.

நடக்க இருப்பவை

10--8--67

மேலக்கற்கண்டார்கோட்டை

தி. மு. க. சார்பில் மாலை 6-30 மணிக்கு திரு. வி. க. திடலில்; தலைவர்: ச. கணேசன்; பேசுவோர்: அமைச்சர்கள் கே. ஏ. மதியழகன், சத்தியவாணிமுத்து, மற்றும் ஆர். நாகசுந்தரம் எம்.எல்.ஏ., ஏ. நடராசன், கோ. இராமானுசம்.

குளித்தலை

தி. மு. க. சார்பில் இரவு 7-மணிக்கு; வ. உ. சி. திடலில்; தலைவர்: மா. கந்தசாமி பி.ஏ., பி.எல்., எம்.எல்.ஏ.; பேசுவோர்: அமைச்சர் ஏ. கோவிந்தசாமி, இளமுருகு பொற்செல்வி, குளித்தலை முத்துக்கிருட்டினன், கு. வீ. முத்துசாமி, அ. பெ. கிருட்டினன், முத்து, கே. வி. ஆர். சிவராசு, அப்துல் அஜீஸ் பி.ஏ., பி.எல்., என். பாலன் பி.ஏ., பி.எல்., என். நல்லசாமி பி.ஏ., பி.எல்., மற்றும் பலர்.

11--8--67

சென்னை 25-வது வட்டம்

எம். ஜி. ஆர். ரசிகர் மன்றத் துவக்கவிழா; மாலை 6-30மணிக்கு கொண்டியம்பதி ரங்கப் பிள்ளை தோட்டத் தெருவில்; தலைவர்: எம். வி. சாமிநாதன்; பேசுவோர்: ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம்.எல்.ஏ., எம்.ஆர். கண்ணன் எம்.எல்.ஏ., ஜி. இலட்சுமிபதி எம்.சி., ம. ரா. ஏழுமலை, என். ஏழுமலை.

Madras State Electricity Board

Ennore Thermal Scheme

WANTED WELDERS

High Pressure Arc and Gas welders having the following minimum qualifications are required for Ennore Thermal Scheme.

1. AGE: 25 to 40 years as on 1—8—'67.

2 QUALIFICATIONS:

1. Academic:—Passed IIIrd Form.

2 Technical:—(a) Passed I T I. Trade Test in welding Technology or any other equivalent test from other recognised institutions or organisations.

(b) Should possess current certificate authorising welding or Low carbon steel and alloy steel tubes, issued by the Chief Inspector of Steam Boilers of any State in India having passed all the Tests prescribed in the Indian Boiler Regulations,1950. Preference will be given to those having certificate in Radiographic Examination of welds.

3. EXPERIENCE: Should have worked at least two years in Steam Power Stations on jobs involving low carbon steel and/or alloy steel

4. PAY: Rs 12/- (Rupees Twelve) (Maximum) per day depending upon qualifications and experience.

No travelling allowances will be paid for interwiew The last date for receipt of applications with full details as above and with true copies of certificates etc. by the undersigned is on 19—8—'67.

Any further details may be obtained from the undersigned in person.

G. THIRUNAVUKKARASU
Special Construction Engineer
Ennore Thermal Scheme

Ennore,
Madras-57
Dated: 28-7-'67.

பொன்னேரித் தொகுதி ஊராட்சித் தலைவர்கட்கு:

12—8—67 அன்று செங்கற்பட்டு மாவட்டப் பொறியாளரும் மாவட்ட ஆட்சித் தலைவரின் செயலாளரும் பொன்னேரித் தொகுதியில் உள்ள கிராமங்களின் சாலைகளையும், பள்ளிக்கூடங்களையும் பார்வையிட வருகின்றார்கள்; அவர்களுடன் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் ப. நாகலிங்கமும், சோழவரம் ஊராட்சி ஒன்றியப்புத் தலைவரும் வருவார்கள்; ஆகவே, தொகுதியில் அடங்கிய ஊராட்சித் தலைவர்கள் அனைவரும் அவரவர் கிராமங்களில் இருந்து குறைகளை எடுத்துரைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.